15/04

சுருக்கம்

சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை – 2026-2027-ஆம் ஆண்டில் குழந்தைகளின் பாலின விகிதத்தை உயர்த்துவதற்காக சிறப்பாக செயலாற்றி சாதனை புரிந்த முதல் மூன்று மாவட்டங்களுக்கு பரிசுகளை முறையே முதல் பரிசாக ரூ.1,00,000/-மும், இரண்டாம் பரிசாக ரூ.75,000/-மும், மூன்றாம் பரிசாக ரூ.50,000/-மும் மற்றும் பாராட்டுச் சான்றிதழ்கள் தமிழ்நாடு பெண் குழந்தைகள் பாதுகாப்பு நாளான பிப்ரவரி 24-இல் மாநில அரசு விருதுகளை வழங்கிட அதற்கான நிதி ஒப்பளிப்பு செய்து – ஆணை வெளியிடப்படுகிறது.

சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் [சந5(2)] துறை

அரசாணை (ப) எண்.241

நாள்: 27.10.2026
ஸ்ரீ பராபவ, ஐப்பசி 10,
திருவள்ளுவர் ஆண்டு 2057

படிக்க:

1. அரசாணை (நிலை) எண்.37, சமூக நலம் மற்றும் சத்துணவு திட்டத்(சந5(2)) துறை, நாள்.19.10.2020.
2. அரசாணை (ப) எண்.214, சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை, நாள் 08.09.2025.

மீண்டும் படிக்க:

3. சமூக நல ஆணையரின் கடித ந.க.எண். 1495553/ குந4/ 2026, நாள் 13.05.2026.

.....

ஆணை:

மேலே முதலாவதாக படிக்கப்பட்ட அரசாணையில் குழந்தைகளின் பாலின விகிதத்தை உயர்த்துவதற்காக சிறப்பாக செயலாற்றி சாதனை புரிந்த முதல் மூன்று மாவட்டங்களுக்கு பரிசுகளை முறையே தங்கம், வெள்ளி மற்றும் வெண்கலப் பதக்கங்கள் பாராட்டு பத்திரங்களுடன் தமிழ்நாடு பெண் குழந்தைகள் பாதுகாப்பு நாளான பிப்ரவரி 24-இல் வழங்க மாநில அரசு விருதுகளை தோற்றுவித்து, அதற்கான தொடர் செலவினமாக ரூ.3,00,000/- நிதி ஒப்பளிப்பும் செய்து ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

2. மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், 2025-2026 ஆம் நிதியாண்டிற்கு குழந்தைகளின் பாலின விகிதத்தை உயர்த்துவதற்காக சிறப்பாக செயலாற்றி சாதனை புரிந்த முதல் மூன்று மாவட்டங்களுக்கு பரிசுகளை முறையே ரூ.1,00,000/-, ரூ.75,000/- மற்றும் ரூ.50,000/-க்கான ரொக்க பரிசினை (Cash Award) காசோலையாக பாராட்டு பத்திரங்களுடன் தமிழ்நாடு பெண்

குழந்தைகள் பாதுகாப்பு நாளான பிப்ரவரி 24-இல் மாநில அரசு விருதுகளை வழங்குவதற்கு ஏதுவாக ரூபாய் 3,00,000/- நிதி ஒப்பளிப்பு செய்து ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

3. மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட சமூக நல இயக்குநரின் கடிதத்தில், 2026-2027-ஆம் நிதியாண்டில் குழந்தைகளின் பாலின விகிதத்தை உயர்த்துவதற்காக சிறப்பாக செயலாற்றி சாதனை புரிந்த மாவட்ட நிர்வாகங்களுக்கு பரிசுகளாக முறையே முதல் பரிசு ரூ.1,00,000/, இரண்டாம் பரிசு ரூ.75,000/-, மூன்றாம் பரிசு ரூ.50,000/- என ரொக்கப் பரிசினை (Cash Award) காசோலையாகவும், பாராட்டு பத்திரங்களுடன் உரிய மாவட்ட நிர்வாகத்திற்கு வழங்குவதற்கும் மாநில அரசு விருதுகளை வழங்க அதற்கான செலவினமான ரூ.3,00,000/-ஐ நிதி ஒப்பளிப்பு செய்து தமிழ்நாடு நிதி விதித் தொகுப்பு விதி-99 இன் கீழ் முன்பணமாக பெற்று செலவினம் மேற்கொள்வதற்கும் இவ்விருது வழங்குவதற்கு வரையறுக்கப்பட்டுள்ள தகுதிகள், சாதனைகள், விருதுகள், விருதுக்கான முன்மொழிவுகள், பரிந்துரைக்கான காலம், நிதி ஒதுக்கீடு விவரம் மற்றும் தேர்வுக் குழுவிற்கும் அனுமதி வழங்குமாறு சமூக நல இயக்குநர் அரசைக் கோரியுள்ளார்.

4. சமூக நல இயக்குநரின் கருத்துருவை நன்கு பரிசீலனை செய்த அரசு அதனை ஏற்று, 2026-2027-ஆம் நிதியாண்டில் குழந்தைகளின் பாலின விகிதத்தை உயர்த்துவதற்காக சிறப்பாக செயலாற்றி சாதனை புரிந்த மாவட்ட நிர்வாகங்களுக்கு பரிசுகளாக தங்கம், வெள்ளி மற்றும் வெண்கலப் பதக்கங்கள் வழங்குவதற்கு பதிலாக முறையே முதல் பரிசு ரூ.1,00,000/-, இரண்டாம் பரிசு ரூ.75,000/-, மூன்றாம் பரிசு ரூ.50,000/- என ரொக்கப் பரிசினை (Cash Award) காசோலையாக பாராட்டு பத்திரங்களுடன் உரிய மாவட்ட நிர்வாகத்திற்கு வழங்குவதற்கும் மாநில அரசு விருதுகளை வழங்க அதற்கான செலவினமான ரூ.3,00,000/-ஐ நிதி ஒப்பளிப்பு செய்து தமிழ்நாடு நிதி விதித் தொகுப்பு விதி-99 இன் கீழ் முன்பணமாக பெற்று செலவினம் மேற்கொள்வதற்கும் சமூக நல இயக்குநருக்கு அனுமதி வழங்கப்படுகிறது.

5. மேலும், அரசாணை (ப) எண்.214, சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை, நாள் 08.09.2025-இல், குழந்தைகளின் பாலின விகிதத்தை உயர்த்துவதற்காக சிறப்பாக செயலாற்றும் மூன்று மாவட்ட நிர்வாகங்களுக்கு முதல் மூன்று பரிசுகளாக முறையே முதல் பரிசு ரூ.1,00,000/-, இரண்டாம் பரிசு ரூ.75,000/-, மூன்றாம் பரிசு ரூ.50,000/- என ரொக்கப் பரிசினை (Cash Award) காசோலையாக பாராட்டு பத்திரங்களுடன் உரிய மாவட்ட நிர்வாகத்திற்கு வழங்குவதற்கு வரையறுக்கப்பட்டுள்ள தகுதிகள், சாதனைகள், விருதுகள், விருதுக்கான முன்மொழிவுகள், பரிந்துரைக்கான காலம், நிதி ஒதுக்கீடு விவரங்களை பின்பற்றுமாறு சமூக நல இயக்குநருக்கு அறிவுறுத்தப்படுகிறது.

6. மேலும் பரிசு பெற்ற மாவட்ட நிர்வாகங்கள் அப்பரிசுத் தொகையினை குழந்தைகளின் பாலின விகிதத்தினை உயர்த்துவதற்கு மாவட்டத்தில் சிறப்பாக பங்காற்றிய அனைத்து பங்குதாரர்களுக்கும் (Stake Holders) பாராட்டு சான்றிதழ்கள்/ புத்தகங்கள் வழங்குவதற்கும், குழந்தைகளின் பாலின விகிதத்தை உயர்த்துவதற்கு தேவையான விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்துவதற்கும் மாவட்ட அளவில் இப்பரிசுத்தொகையினை பயன்படுத்த வேண்டும்.

7. மேலே பத்தி-4-இல் ஒப்பளிக்கப்பட்ட தொகை கீழ்க்காணும் கணக்குத் தலைப்பின்கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்:-

"2235 – சமூகப் பாதுகாப்பும் நலனும் – 02 சமூக நலன் 103 – மகளிர் நலன் – மாநிலச் செலவினங்கள் – MC பாலின விகிதத்தை உயர்த்தும் மாவட்டங்களுக்கு விருது வழங்குதல் – 359 பரிசுகளும், வெகுமதிகளும்" – 01 – பரிசுகளும் வெகுமதிகளும்".

(IFHRMS DPC: 2235 – 02 – 103 – MC – 35901)

8. இவ்வரசாணை நிதித்துறையின் ஒத்திசைவுடன் மின் அலுவலக எண். 14055778 / நிதி (சந)/ 2026, நாள். 16.10.2026-இல் பெறப்பட்ட ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

ம.பல்லவி பல்தேவ்,
அரசு செயலாளர்.

பெறுநர்:-

சமூக நல இயக்குநர், சென்னை –05.
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர், சென்னை–01.
மாநிலக் கணக்காயர், சென்னை – 18
அனைத்து மாவட்ட ஆட்சியர்கள்,
(சமூக நல இயக்குநர் வழியாக)
அனைத்து மாவட்ட கருவூல அலுவலர்கள்
(சமூக நல இயக்குநர் வழியாக)
அரசு முதன்மைச் செயலாளர்,
மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வு துறை, சென்னை–09.
இயக்குநர்,
குழந்தைகள் நலன் மற்றும் சிறப்பு சேவைகள் துறை,
சென்னை –08.
இயக்குநர் மற்றும் குழும இயக்குநர்,
ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி பணிகள் திட்டம்,
சென்னை–113.
இயக்குநர், பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்துத் துறை,
சென்னை –06.
இயக்குநர், மருத்துவம் மற்றும் ஊரக சுகாதாரத் துறை,
சென்னை –06.

நகல் :-

மாண்புமிகு அமைச்சர் (சமூக நலன் மற்றும் மகளிர் உரிமை)
அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை –09.
நிதி (சந)த் துறை, சென்னை –09.

அரசு செயலாளர்.
சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை அவர்களின்
முதுநிலைத் தனிச் செயலர். சென்னை -09.
சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் (சந.2/அநமு) துறை.
சென்னை -09.
இருப்புக் கோப்பு / உதிரி நகல்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

27.10.26

பிரிவு அலுவலர்